# மலர்ந்த சிந்தனை

## (கவிதையோடு கலந்த சிந்தனை)


ந.றொபேட் நிக்சன்



வெளியீடு : பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கண்டாவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்ந்த
# சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

மாறிவரும் உலகப் போக்கில் மனிதன் தன்னை வளப்படுத்திக்கொள்ள பண வலிமையை மட்டும் தேடி ஓடுகிறான். ஆனால் தற்கால சூழமைவில் மனித மனங்களை ஆற்றுப்படுத்தி வளப்படுத்தும் சக்தி கலைப் படைப்புகளுக்கே உரியது என பல இடங்களில் நிரூபித்துக் காட்டியுள்ளார் திரு. ந. நிக்சன் அவர்கள்.

இன்று மண்சுமந்த வலிகளையும் மனிதன் பட்ட அவலங்களையும் தாண்டி சுவை மிகு படைப்பொன்றை படைத்திருப்பது கண்டு நான் பெருமை கொள்கின்றேன். ஒரு கவிதையின் அதி உச்ச பெறுமானம் குறித்து உணரும் திறன் கவிஞனுக்கு ஏற்பட வேண்டுமானால் அவன் தன் அதீத வாசிப்பு திறன் ஊடாகவே அதனை சாத்தியமாக்க முடியும். ஆகவே ஒரு கவிஞன் உள்வட்ட நிலையிலிருந்து தன் சிந்தனைகளையும் உணர்திறன்களையும் விசாலமாக்கவேண்டிய தேவை அவனுக்கு ஏற்படுகிறது. இந்த நூலாசிரியர் இவ்வாறான அனுபவத்திற்குட்பட்டு தெளிவு பெற்றுள்ளமையை இவரின் " மலர்ந்த சிந்தனை' எனும் மனித உணர்வுகளுடன் தொடர்புபட்ட கவிதையோடு கலந்த படைப்பானது எடுத்தியம்புகிறது.

பல்துறை ஆற்றல் மிக்க இந் நூலாசிரியர் எமது கத்தோலிக்க " திருச்சபையின்" அமைப்புக்களின் வழிகாட்டியாக செயற்படுபவர். மென்மேலும் பல புதிய புதிய சிந்தனைகளோடு கூடிய படைப்புக்களை இனிவரும் காலங்களில் எதிர்பார்க்க முடியும் என்ற நம்பிக்கையோடு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மன மகிழ்வுறுகின்றேன்.

Iruthayathas
Rev. Fr. P. Iruthayathas

(கிளி/ முல்லை)
மறைக்கோட்ட பொதுநிலையினர்கழக
ஆன்மீக இயக்குனர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திரு.ந.றொபேட் நிக்சன் அவர்களின் கவிதை மொழிநடையில் அமைந்த **"மலர்ந்த சிந்தனைகள்"** எனும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இம் மலரானது நாற்பது கவிதைகளையும் முப்பது சிந்தனைக்கான கருத்துக்களையும் கொண்டமைந்ததாய்க் காணப்படுகின்றது. கவிதை மொழிநடையில் சொல்ல வரும் விடயத்தினைத் தெளிவாக முன்வைக்கும் உத்தி இம் மலரில் சிறப்புப் பெறுகின்றது. ஒரு மனிதனானவன் பூரண மனிதனாக வாழ்வதற்குத் தன்னை எவ்வாறு மாற்றிக்கொள்ள வேண்டும். தமிழ் கலாசாரம், இனம், மொழி, பண்பாட்டுப் பிறழ்வுகள் போன்ற பல்வேறுபட்ட உண்மைச் சம்பவங்களைப் பேசுபொருளாகக் கொண்டமைந்துள்ளன.

மனித உணர்வுகளையும் அதன் வெளிப்பாடுகளையும் தத்ரூபமாக எடுத்துக் காட்டுபவையாக கவிதைகள் அமைவதுடன், சமூகத்தின் பிறழ்வான நடத்தைகளைத் தைரியமாக சுட்டிக்காட்டுபவையாக அமைய வேண்டும். இவ்வாறான இலக்கியப் படைப்புக்கள் எழுத்துருவில் மலரும் போது சமூகத்தில் ஓர் மாற்றத்தினைக் காணலாம் என்பதில் ஐயமில்லை.

எனவே மனித மனங்களை நல்வழிப்படுத்தி சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் வெளியிடப்படும் இம் மலர் சிறப்புற வெளிவரவும், மலர் வெளியீட்டு விழா இனிதே நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.த.குருகுலராசா,
கௌரவ.கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கோரக்கன்கட்டு புத்தொளி கலாமன்றத்தின் இயக்குனரான திரு.ந. றொபேட் நிக்சன் அவர்களின் **" மலர்ந்த சிந்தனை"** எனும் நூலினோடு உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். புதிய புதிய சிந்தனைகளினோடு இலக்கியத்தை புதிய பரிமாணத்திற்கு இட்டுச்செல்லும் ஆற்றல்மிக்க திரு.ந. றொபேட் நிக்சன் அவர்கள் மலர்ந்த சிந்தனை எனும் பல்சுவைத் தொகுப்பின் ஊடாக தன்னுடைய இலக்கிய சிதறல்களை எம்மோடு பகிர்ந்திருக்கின்றார். ஆற்றல்மிக்க இவரது படைப்புக்கள் கண்டு வியக்கின்றேன்.

எமது கண்டாவளைப் பிரதேசத்தின் கோரக்கன்கட்டு கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த இந் நூலாசிரியர் அப்பிரதேசத்தில் சிறப்பாக இயங்கிவரும் புத்தொளி கலாமன்றத்தின் துடிப்புமிக்க செயற்பாட்டாளர். புத்தொளி கலாமன்றம் தன்னுடைய கலைப்பணிகளின் ஊடாக சிறப்புக்களுக்கு றொபேட் நிக்சனின் அர்ப்பணிப்புமிக்க உழைப்பு பெரும் துணை புரிந்திருப்பதை நான் இவ்விடத்தில் நினைவுகூருகின்றேன்.

இயல்பாகவே கலை ஆர்வம் மிக்க இந் நூலாசிரியர் மேலும் பல படைப்புக்களைப் படைத்து இலக்கிய உலகில் தனக்கென தனியான ஓர் முத்திரையைப் பதிக்கவேண்டுமென வாழ்த்துவதோடு **" மலர்ந்த சிந்தனை"** இலக்கிய அன்பர்களுக்கு நறுமணம் வீசட்டும் என வாழ்த்துகின்றேன்.

த. முகுந்தன்,
பிரதேச செயலாளர்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

பரந்தன் சந்தியில் இருந்து 2.5km முல்லை வீதியில் அமைந்துள்ள கோரக்கன்கட்டு எனும் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து வருகின்ற இந் நூலாசிரியர் இவரினாலே இக்கிராமம் மகுடம் சூடிக்கொள்கிறது என்று கூறினால் அதுவும் மிகையாகாது.

திரு. ந. நிக்சன் அவர்கள் இப்பிரதேசத்திலே வாழ்கின்ற பல இளம், முது கலைஞர்களைக் கொண்டு “புத்தொளி கலை இலக்கிய மன்றம்” எனும் கலை அமைப்பை உருவாக்கி வழிநடத்தி வருவதே இதன் சிறப்பாகும்.

இன்றைய கவி உலகில் யாப்பிலக்கணத்திற்கு கட்டுப்படாமல் உணர் நிலையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகின்ற கவிதைகளை புதுக்கவிதை, வசனக்கவிதை, உரைநடைக்கவிதை, இலகுகவிதை, கட்டுகளற்ற கவிதை எனப் பல பெயர்களாலும் அழைத்தனர். இவை விரிவடைந்து பல்வேறு மட்டங்களில் பரந்து வியாபித்துச் செல்கிறது.

தேடல் உள்ள ஒருவருக்கு இரசனை இருக்கும். இரசனை உள்ள ஒருவருக்கு சுகம் இருக்கும். இந்தத் தேடல், இரசனை, சுகம் மூன்றும் இருந்தால் வாழ்வு சுவையாக இருக்கும். இந் நூலாசிரியரும் நன்றாக சுவைத்தே **“மலர்ந்த சிந்தனை”** எனும் நூலினை கலை உலகிற்கு காணிக்கையாக்குகிறார் என்பது வெளிப்படையாகிறது.

முன்னொரு நாளிலிருந்து இவரை நான் ஒரு நாடக ,பொது கலைத்துறை நெறியாளராகவே எமது பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்ததன் ஊடாக அறிந்திருக்கின்றேன். ஆனால் அதனையும் தாண்டி இப்போது ஓவியம், சிற்பம், இலக்கியம் என அவரது கலைப்பயணம் பரந்து விரிந்த வெளிகளுக்குள் பயணம் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கவிதைகளின் பாடுபொருள் பற்றி நோக்கும் போது மனக்குமுறல்கள் மனித அவலங்கள் மனமாற்றம் சமூக நெருடல்கள் தளரா நம்பிக்கை, எழுச்சி, காலம் தவறாமை போன்ற பல்வேறுபட்ட விடயங்களையும் ஒரு மனிதனின் முன்னேற்றப் பாதைக்கு அவன் கைக்கொள்ள வேண்டிய பல சிந்தனை துணுக்குகளாலும் பக்கங்களை அலங்கரித்திருக்கின்றார். இவை ஒவ்வொன்றும் மனித சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளதுடன் வாசகர்களது இதயங்களில் என்றென்றும் அசைபோடும் என்பது திண்ணம்.

அதி நவீனத்துவம் நிறைந்த முன்னோக்கிய பாதையில் தமிழ் மொழிப்பற்று குறைந்து கொண்டுவரும் இக்கால கட்டத்தில் தனது மொழி ஆற்றலினால் புதுக்கவிதை அமைவில் கவித்துவம் பொங்கும் வகையில் புலமையில் திளைத்து வெளியிடும் **"மலர்ந்த சிந்தனை"** எனும் தொகுப்பானது சமகால துன்பியல் வாழ் நிலையிலிருந்து மீண்டு எழத் துடிக்கும் எம் இனத்தின் உள்ளக் குமுறல்களை கொட்டித்தீர்ப்பனவாக " கண்ணின் காட்சிகள்" எனும் கவிதையினூடாக மிக அழகாகவும் ஆழமாகவும் வெளிக்கொணர்கிறார். அதன் இறுதி வரிகள் இவ்வாறு சுட்டிநிற்கிறது.

**ஒன்று மட்டும் உண்மை**
**மற்றவரை மண்டியிட வைக்கும்**
**மனிதத்தின் பார்வைகளோடும்**
**மானத்திற்காய் உழைத்த வேர்களோடும்**
**சத்தியம் செய்து கூறுவது**
**தர்மத்தின் தேவதை**
**ஒரு நாள் கண்திறப்பாள்....**

இதேபோல் " ஊருக்கு அதிபதி நீயேதான்" என்ற கவிதையிலும் சமூக, அனாகரிகமான , சீரழிவுகள் பற்றி பின்வருமாறு பதிவிடுகிறார்.

**தெருவார் தெருவினிலே**
**சிரம் தாழ்த்தி நிலம் பார்த்து**
**விழி மூடி வெள்ளைப்பிரம்புடன்**
**வலம் வருவோரும்**
**ஊரோடு கூடி நின்று - உனை**
**எட்டி உதைக்காமல் இருக்கும் வரை - அந்த**
**ஊருக்கு அதிபதி நீயேதான்.**

இவ்வாறாக எடுத்தாளப்பட்டுள்ளமையானது சிறப்பிற்குரியது. இந் நூலாசிரியர் பற்றி சில வரிகள் சுமக்க விளைகையில் இவர் 2012ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு முதல் கண்டாவளைப் பிரதேச கலா சார பேரவையுடன் இணைந்து இன்று வரை யதார்த்த பூர்வமான தனது செயற்திறனை வெளிப்படுத்தி வருவதுடன் எமது மாவட்ட பண்பாட்டு பேரவையால் 2015 இல் நடாத்தப்பட்ட கலைத்திறன்காண் போட்டிகளில் இவரது மன்றம் ஒரே ஆண்டிலே 5விருதுகளை தட்டிச் சென்றது பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ்வாறான ஒரு படைப்பாளி உருவாக்கப்படுகிறான் என்பதற்கு மேலாக பிறக்கிறான் என்று கூறுவது சாலச்சிறந்ததாகும்.

இன்றைய வாழ்வியலில் ஒருவர் தன்னை வளப்படுத்திக்கொள்ள பல விதமான பிரயத்தனம் எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இப் படைப்புக்கள் இலக்கிய உலகிற்கு ஒரு முன் உதாரணமாகத் திகழும் என்பதோடு திரு. ந. நிக்சன் அவர்களின் தணியாத தாகத்தின் விளைவாகவும், தனது ஆளுமையின் மறு வடிவமாகவும் பொங்கிப் பிரசவிக்கும் கவிதையோடு கலந்த **"மலர்ந்த சிந்தனை"** எனும் நூலினோடு நானும் ஒருவனாக கலந்து கொள்வதில் மனம் மகிழ்ச்சியடைகின்றேன்.

மென்மேலும் இவரது சிந்தனை வியாபித்து இலக்கிய உலகிற்கு சொற்பனமாகத் திகழ வேண்டுமென வாழ்த்துவதுடன் அணிந்துரை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

திரு.மா. அருள்சந்திரன்
மாவட்ட கலா சார உத்தியோகத்தரும்
பண்பாட்டு பேரவையின் செயலாளரும்
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
20.12.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் பக்கம் ....

எந்தப் பெற்றவரும் தன் பிள்ளை மகுடம் சூடிக்கொள்கின்ற போது மகிழ்கின்ற மகிழ்ச்சியே பெருமகிழ்ச்சி. அந்த வகையில் என் தாய் என்னோடு இல்லாவிடினும் இத் தொகுப்பை என் அன்னைக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.

இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவம் இருக்கிறது. அதற்கேற்பவே தனது வாழ்வுப்பாதையை அமைத்துக் கொள்கிறான். இந்த வாழ்வியல் ஓட்டத்தில் மனதில் தோன்றும் சோகம், மகிழ்ச்சி, துயரம், விரக்தி, தனிமை போன்ற உணர்வுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விளைகின்றபொழுது கற்பனை பிறக்கிறது.

கற்பனை பிறக்கின்ற பொழுது காகிதத்திற்கும் எழுது முனைகளுக்கும் பிணைப்பு ஏற்படுகிறது. இவ்வாறான மன உணர்வுகளை சில சமயங்களில் சுமக்க நேரிட்ட பொழுது பல சிந்தனைகள் என்னில் துளிர் விட்டன செயல் வடிவம் பெற்றன.

இதனை நான் கவிதை என்று சொல்லவில்லை கவி வடிவில் அமைந்த சிந்தனை என்று உரிமை கோருகிறேன்.

சிந்தனையில் மலர்ந்த துணுக்குகள் சில உணவுக்குக் கறி கொடுத்து சுவை சேர்ப்பது போல சிலவற்றை பதிவிடுகிறேன். இவற்றில் சில எனது சமூக வலைத்தளத்தில் நாளாந்த சிந்தனைப்பக்கத்தில் அலங்கரித்தன. பின்னாளில் பரந்த உலக வெளிகளுக்குள் உலா வருகிறது கண்டு அதன் சக்தியை என்னால் உணர முடிகிறது.

இவ்வாறு என்னுடைய மலர்ந்த சிந்தனை உருப்பெற்றது. இதனை வாசகர் முன் சென்றடைய வேண்டும் என எண்ணிய போது எமது பிரதேச செயலரும், பிரதேச செயலகமும் 2015ஆம் ஆண்டிலே ஒப்புதல் வழங்கிவிட்டது. இது எனக்கு மிகப் பெரும் பலமாக அமைந்ததன் காரணத்தால் இந்தத் தொகுப்பினை வெளியீடு செய்து மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பர் திரு.ம. றோமியல் ஆசிரியர் அவர்களையும் இந்த இடத்தில் நினைவு கூருகின்றேன். அவர் எனது கலைப்பயணத்தில் நீண்ட காலமாக சேர்ந்து பயணித்து வருபவர். அத்துடன் எனது கலை மன்ற செயலாளர் ஆ.செல்வராஜ், பொருளாளர் திரு. வ. சசிக்குமார் ஆசிரியர் ஆகியோரையும் இன்னும் பலரையும் எனது பயணத்தோடு கூட்டிச் செல்கிறேன்.

இந்தக் கலைப்பயணம் என்பது எல்லோராலும் இலகுவில் தேர்ந்து கொள்ளக்கூடிய தெரிவு அல்ல. சில மனிதர்களுக்கு பிறவியிலேயே இருந்து பிறக்கின்ற உணர்வுகளுக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றபோது மிளிர்ந்தவனே கலைஞன் என்று கூறலாம்.

ஒருவரால் மட்டும் தனித்து நின்று இவ்வாறான படைப்புக்களையோ கலை உணர்வுகளையோ வெளிப்படுத்த முடியாது அது பலரது கூட்டு முயற்சியில் விளைந்த விளைச்சலாகும். இந்த விளைச்சலின் பயனை நான் மட்டும் அனுபவிப்பதை எப்பவுமே நான் விரும்பியதில்லை என்பதால் இனிவரும் காலங்கள் எனக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்து நல்ல கலைச்சமூகத்தை உருவாக்க முடியும் என உறுதிப்பூண்டு நிற்கிறேன்.



திரு. நசரேனு றொபேட் நிக்சன்
2ம் கட்டை, கோரக்கன்கட்டு.
பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | |
|---|---|
| நூலின் பெயர் : | " மலர்ந்த சிந்தனை" |
| நூலின் வகை : | கவிதையோடு கலந்த சிந்தனைகள் |
| ஆசிரியர் :- | திரு. ந. றொபேட் நிக்சன் (ந. நிக்சன்)<br>2ம் கட்டை, கோரக்கன்கட்டு, பரந்தன். |
| தொடர்புக்கு :- | 077 022 6145 |
| பதிப்புரிமை :- | ஆசிரியருக்கு |
| பதிப்பு :- | 2016 |
| பக்கம் :- | 70 |
| வெளியீட்டு எண் :- | 11 (பதினொன்று) |
| வெளியீடு :- | பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>கண்டாவளை. |
| நிதி அனுசரணை :- | வடமாகாண பண்பாட்டலுவல்கள்<br>திணைக்களம்<br>வடமாகாணம். |
| அச்சுப்பதிப்பு :- | வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதானம்

ஒழுங்காய் .....
வேயப்படாத
ஓலைக் குடிசை ஒன்றில்
சிலர் அங்கும் இங்கும்
அலைவதை உணர்ந்தேன்
ஓடித்திரிந்த ஒய்யாரி
ஒருநாள் ஓலமிட்டாள்
நானோ ஓடிச்சென்று
ஒதுங்கி நின்று
அமைதியாய்
காது கொடுத்தேன்
இலேசாய் முணகல் சத்தம்
எனக்கும் ஒரு பதட்டம்
மனச் சுமை சுமந்து
சோர்ந்து விழுந்து எழுந்து
சிறிது மனதை
தேற்றியவனாம்
ம்......... யாரது.........
என்றவாறு எட்டிப்பார்த்தேன்
மொச்சை வாடையுடன்
முகத்தில் அறைந்தாற்போல்
அமைதியாய் கிடந்தது
ஓலைக் குடிசை
புரிந்துகொண்டேன்
பணத்திற்காய் பிணமாக்கி
பாதியிலே நழுவிவிட்டான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபாவி
பிணத்தைப் பார்த்த
உள்ளம் நடு நடுங்கி
ஊமையாய்
வெளியே வர
கான்ஸ் ..... அப்..... என
காதில் முழங்கின
இடி விழுந்தது
இதயத்தில் .....
விதியோடு
சதி செய்த வேலையாய்
காத்திருந்த கைவிலங்குடன்
கரைசேரா
ஓடம் ஒன்றில்
கடந்து போயின பொழுதுகள்...
ஓடத்தில் என்
தலைமேல் வீசிய வலை
வட்டமாய் விரிந்து கிடக்கிறது
அது எப்பவும் எப்படியும்
விழலாம் என் மீது.....அது
உன்மீதும் விழலாம்
விழித்திரு தமிழா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடலை

கட்டிளம் பருவம் உன்னை
காளையாய் நிமிர்த்தி நிற்கும்
ஈரெட்டு வருடங்கள் தாண்டி
இருப்பதற்கும் நேரமின்றி
உலாவரும் பருவமல்லோ......

காகிதத்தில் ஓடம் விட்டு
ஒட்டி நின்ற ஞாபகங்கள்
அத்தனைக்கும் முற்று வைத்து
காற்றினில் பறந்திடும்
கட்டிளம் பருவம் அது .....




நன்மை ஏது தீமை ஏது
என்றுணரும் பருவத்தில்....
பருவத்தைப் பாழாக்கி
துருவத்தில் வாழக் கனாக்கண்டு
நாய்களோடு கட்சி தொடங்கி
நரிகளோடு வாழ நினைக்கிறது
கட்டிளம் பருவம் அது

ஊர் வாசனை மறந்து
தார் வாசனை மணக்க நினைத்து
போதையோடு பெயர் கெட்டு பேதலித்து
துயர் கண்டு மலர நினைக்கிறது
கட்டிளம் பருவம் அது.



அத்தனைக்கும் முட்டு வைத்து
நாளைய தலைமுறை உன்னை
நப்பாசை பேசமுன்பு
சான்றோனாய் நிமிர்ந்து நட
நாளைய உலகம்
உன்னை தலைவணங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தம்

அந்தக் குருவிகளும் ஓர் நாள்
வாளிடத்தை விட்டுப் புறப்படும்
அந்த நாள் அதற்குத் தெரிவதில்லை
அது எப்போ வரும் என்று....

பிணம் தின்னும் கழுகுகள் முன்னே
ஒட்டி உரு மறைத்து
நித்தம் பசிபோக்கி
முழு நாளைக் கழிக்கிறதே....

மானிடனே உனக்கு மட்டும்
மாட மாளிகையும் கூட கோபுரமும் தேவையா

நிலையில்லா உலகில்
நிலையானது ஒன்றும் இங்கில்லை....
நேற்றும் இன்றும் என்றும்
மாறாத சொந்தம் மட்டும்
தொடர்ந்திடும்....
உன் பின்னே......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் சுற்றி



மனிதா நீ மரணிக்கும் முன்
உனக்கோர் இலக்கணம் எழுது
உன் பெயர் உனக்கானது அல்ல
அது உன் சந்ததிக்கானது என்று


உன் பிறப்பு ஒன்றே உண்மை அன்றோ
மண்ணில் வாழ்வது நிஜமல்ல..
அந்த உண்மையை எண்ணிப்பார்...
ஒட்டிப் பிறந்த உன் இமைகளுக்குத் தெரியாது
உன் கண்கள் எங்கு பார்க்கிறது என்று
ஒட்டறுத்த உன் கால்களுக்குத் தெரியாது – நீ

எங்கு செல்கிறாய் என்று
ஒட்டியான தாமரை உதடுகளுக்குத் தெரியாது
என்ன பேசுகிறாய் என்று
உன் செவிகளுக்குத் தெரியாது – நீ
எதைக் கேட்கிறாய் என்று

ஆனால் வெட்டியாய் திரியும் – உன்
உள்ளத்திடமே கேட்டுப்பார்
மறுபடி மறுபடி கேட்டுப்பார்
நான் யார் என்று.....
மனிதா பட்டைதீட்டிய வேலியோடு
உலகமே காத்திருக்கிறது – உன்
நல்வரவுக்காய்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது தேவையா?

ஒட்டிப்படுக்க ஒட்டியவள்
இல்லை என்று
தட்டிப் படுக்கையிடம்
தட்டி நீ சென்றிடாதே
தட்டிவிடும் சட்டம் உனை – பின்
ஒட்டிப் படுக்கையும் இன்றி
பெட்டிப் படுக்கையுடன்
பட்டி தொட்டி
தட்டித் திரிவதே உன்கதையாய்
முடிந்து விடும்.


ஆசையோ ஆறுநிமிடம்
அந்தரங்கம் சில நிமிடம்
அத்தனையும் விந்தை உலகில்
விற்பன்னங்கள் தந்த சொற்பனங்கள்
அடிமையாய் வீழ்வதும்
ஆணவத்தோடு எழுவதும்
ஆறறிவு ஜீவனுள்ள மனிதனுக்கே...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மாற்றிய பாதை......



போதை தலைக்கேறியது - **உனக்கு**
பாதை தடுமாறியது
கை கால் பதறியது
பகுத்தறிவு தூர விலகிச் சென்றது.



தத்தித் தளர்ந்து தள்ளாடி
வாசல் புகும் வேளை
வசைபாடி வந்தாள்
உன் பெண்சாதி
கூடவே கை கோர்த்தனர் பிள்ளைகள்

நச்சரிப்பு எள்ளி நகை, மட்டம்தட்டல்
துள்ளி எழுந்தது நெஞ்சக் குறுமுறல்
கையில் பட்டது இரும்புக் கம்பி
இளையவள் தலையில் இறங்கியது வீறுடன்

சொட்டியது இரத்தம் முட்டியது கண் இமை
"கோமா" இவள் நிலை
போதை செய்த வேலை - பெண்ணின்
வாழ்வு தனை மாற்றியதோ

போதையவன் மதி தெளிந்து
மண்டியிட்டு மல்லாக்கப் புரண்டு
கத்திக் கதறி பெண்ணைப்
பார்த்தவுடன் சபதமிட்டான்
இதுதான் போதையின் இறுதி
நாள் என்று....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனஓலம்

அன்றொரு நாள்
மனிதனாய் பிறந்ததையிட்டு
மனதிலே புலம்பினேன்
மாண்புடை படைப்பென
மண்ணியம் எடுத்தியம்பும்

இன்றைய காலத்தில்
பசப்பான வார்த்தைகள்
போலிப் புன்னகைகள்
வெற்று வாக்குறுதிகள்
உறுதியற்ற வாழ்க்கை நிலை

வாழ்க்கைச் செலவில் அல்லாட்டம்
வாடி வதங்கிய திண்டாட்டம்
கற்றவரோ கதிரையாசை கொண்டார்
சுற்றவரோ தூர விலகிச் சென்றார்
ஏற்றி விட்ட ஏணியான என்னை
எட்டி உதைத்து விட்ட வல்லவரே

ச்சீ.. என்னடா வாழ்வு...
காலவனுக்கு கண்ணில்லையோ
பாழ்பட்ட இவ்வுலகைப் பிரித்தெடுக்க
என்றிருந்த காலமிது காற்றோடு
ஊசலாடுகிறது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜம்

பாலை நிலத்து
விதைகள்
வறட்சியால்
முளைக்கவில்லை
முட்செடி
நடுவே விதைத்த
விதைகள் முளைத்தும் நசுங்கிப்
போயின
ஆயிரம்
கனவுகளுடன்
அதிகாலை எழுந்து
அஸ்தமிக்கும் முன்பே
அலாரம் அடிக்கிறது
எழுந்து நடவென்று
முடியவில்லை....
எங்கும் முட்புதர்கள்
சிக்கிச் சின்னாபின்னமாய்
சிதைந்து போயின
கனவுகள்....
கனவுகளை
காகிதத்தில் கற்பனையாய்
வடிக்க நினைத்தேன்
அதுவும் முடியவில்லை...
முற்றத்து
மா மரத்தில்
ஊஞ்சல் கட்டி
அங்குமிங்குமாய்
ஆடித்திரிந்தது மனசு
அமைதிப்படுத்த
ஆண்டவனைக் கேட்டேன்
கொஞ்சம் பொறு என்றார்
பின் என்னையே – நான்
கேட்டுப் பார்த்தேன்
அத்தனையும் உனைப்
புடம் போடும் என்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரித்திரோம்..

கண்டேன்.....
கல்லறையில் ஓர் வசனம்
" நாறிடும் உடலை நால்வர்
தூக்குமுன் நாவால் உலகை
அளக்கின்றோம்- நாம்
நாவது வீழ்ந்தபின் யாருளர் நமக்கு"

வார்த்தையின்
பொருளை எண்ணி எண்ணிவியந்தேன்
அழியும் பொருளையும்
உடலையும்
அவாதியாய் தேடுகின்றோம்.....
அன்று....
பசியிருக்கும் உணவில்லை
தூக்கம் வரும் பாயுமில்லை
தேவை வரும் பணமுமில்லை
சொந்தமுண்டு பாசமில்லை
இன்று....
உணவுண்டு நோயிருக்கும்
மெத்தையுண்டு தூக்கமில்லை
பாசமுண்டு சொந்தமில்லை
வீடுமுண்டு கடன் தொல்லை
தரித்திரோம் என்பதே செல்வம்
வாழ்வாங்கு வாழ விழித்தெழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாளா வெட்டி.....





வெட்டை வெளி
மொட்டை மாடியில்
சூரியனாய் ஒளிர
விழி திறந்தவளே....

ஒளியை மறைத்து
முக்காடு போட்டுவிட்டு
சூரியனைத்தேடும்
வேடதாரியே.....

காலங்கள் கேட்கிறது
கண்திறவென்று – அதற்கு
கட்டை ஏறிகள்
முட்டு வைக்கின்றனர்

முகமூடிதரித்த
வேடர் கூட்டமும்
காட்டு முயலை வேட்டையாடும்
வேட்டை நாய்களும்

ஒளி தெரியாமல்
இருளில் மூழ்கி
மல்யுத்தம் புரிந்து
குட்டிப்பஞ்சாயம் செய்கிறது

வேடம் தரித்த நரியோ
முக்கால் முயலுக்கென
நீதி கேட்டு நின்றபோது
முகத்திரை கிழிந்து தொங்கியது அம்மணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கா**தோடு ஓர் செய்தி
கனவாய் கேள்மீன்
கட்டிய கல்வீடும்
அடாத்தாய் ....
கைப்படுத்திய காணியும்
உச்சி முதல்
உள்ளங்கால்வரை
கட்டிய....
தங்கப்பட்டாங்களும்
ஒட்டியாணங்களும்
அருமை பெருமையான
சொந்த பந்தங்களும் மனையாளும்
கணவனும், பிள்ளைகளும்
கூடுவிட்டு
ஆவிபோக கூவிடுவர் நாட்செல்ல
நழுவிடுவர்
போலிப் புன்னகையால்
புனரமைக்கப்பட்ட
வாழ்க்கை
பாடையிலே போகையிலே
உன் பின்னால்
யார் வருவான்....
செய்தி கேட்டாய்
புது விதி செய்யப் புறப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவார்

ஓலைக் குடிசையில்
ஒதுங்கிய ஒய்யாரி
ஓலமிட்டும் ஒப்பாரி செய்தும்
ஒருவரும் கிடைக்கவில்லை – என

தத்தளித்து புலம்புகையில்
தனயன் ஒருவன்
தத்தெடுத்து மெத்தையிலே
ஒய்யாரமாய் சித்தரித்து
உலகைக் காட்டினான்

அது சற்று ஏறெடுத்து...
திரு... திருவென முழித்தது
அதற்கு உலகைப்
புரிந்து கொள்ள முடியவில்லை
புரியாத புதிராக புலம்பி அடித்து
காளை கொம்புக்கு மண் எடுத்தது.

எதிரே ... போருக்கு
காளை இல்லை
வீறாப்புடன் புறப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக் கொம்புக் காளை
தெருவோரம் எங்கும்
முட்டி மோதி
இரத்தப் பலிகளை
எடுத்தபடி சுத்தித்திரிகிறது

காளை அடக்கும்
காடையர் எங்கே
கண் விழித்து காத்திருங்கள்
முரட்டுக் காளைகளை வீதிகளில்
உலாவிட்டு உயிர்ப்பலிகளை பறிக்கலாமா..
விழிப்பாய் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செவிடாகும் காது
குருடாகும் கண்
மச மசக்கும் மூளை
தொலைந்து போனது இதயம்...
சிலருக்கு
“கலோ” வில் தொடங்கும் பேசியில்
“ கிலோ” வில் முடியும் கட்டணம்
கடன்கள் ஏறும் விசமாக....
மடிந்து வீழும் உடல் பிணமாக சூறையின்
சிக்கல்களுக்குட்பட்டு
சின்னா பின்னமான
வாழ்வின்....
புரியாத புரிதல்களில்
தொலைபேசியே
எமன் பேசி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்தி வந்தாயா? திரும்பி வந்தாயா?

ஊர் கூடித்
தேர் இழுக்க
ஓர் கை பிடிக்காது தன்னலம் கொண்டு – நீ
வாரிச் சுருட்டினாய்
எல்லையற்று......

சண்டைகளின்
அதிபதி நீ
சண்டையின்
உக்கிரத்தில்
கோவணத் துண்டற்று
ஏதிலியாய்...
முட்கம்பி வேலிக்குள்
முடங்கினாய்
மீண்டு... வந்தாய்...
மிடுக்குடன்
பழையதை மறந்து... நீ
திரும்பி வந்தாய்
ஊருக்கு....
மறுபடி திருந்தி
வந்தாயா
மானிடனே....?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கு அதிபதி நீயே தான்

கோட் சட்டை போட்டவனின்
மேற்சட்டை உரித்தெறிந்து
மெல்லிடை மேனியினை
உடையாக்கி
ஆடவனும் அரைகுறையாய்
மேல் வெட்டும் கீழ்வெட்டுமாய்
அந்தரங்கம் ஆங்காங்கே
எட்டி நிற்க...
சுற்றி நின்றவரும்
ஆங்காங்கே எட்டிப்பார்க்க
சுந்தரியோ நிமிர்ந்து நிற்க

உன் மேனிக்கோ உருவேறி
வெட்கமாம் வெட்கமென
அங்கத்தை கைபிடித்து
வளைந்து நெளிந்து உருமறைக்க
இதுவும் ஒரு விளம்பரமாம்
போக்கணம் கெட்ட ஆடைக்கு

அந்தப் புறந்தானும்
ஆதி வாசியும் அரைகுறைதான்
ஒட்டி நின்று
சில்மிசம் செய்யவில்லை
நீயும் இப்போ......?

ஈரைந்து வயதென்
பிள்ளை பெற்றவனும் பெற்றவளும்
பாடையில் கிடந்தவனும்
எழுந்து நின்று பிச்சை கேட்டவனும்
இச்சை வாடையுடன்
நாறிக் கிடக்கிறது
தெருவோரம்

தெருவார் தெருவினிலே
சிரம் தாழ்த்தி நிலம் பார்த்து
விழி மூடி வெள்ளைப் பிரம்புடன்
வலம் வருவோரும்
ஊரோடு கூடி நின்று – உனை
எட்டி உதைக்காமல்
இருக்கும் வரை – அந்த
ஊருக்கு அதிபதி நீயேதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள்....

சுற்றி வளைத்த
முற்றுகை நடுவே
சீறிப் பாய்ந்து
கடல் அலைபோல்
அவரவர் கைகளில்
அகப்பட்ட பொருட்களுடன்
ஏரி கடல் பாராது
ஏறி இறங்கினர்
அன்றொரு நாள்

போனவர்கள் போகட்டும்
நாமேன்.... அதற்குள்....
என்றுணர்ந்து – என்
அடுத்தவனும் நானும்
எஞ்சியவராய்
அந்த இறுதி
ஊரைத் தேடி
புறப்பட முன்பே
தம்பி சட்டி
எட்டி நிற்கிறது
என்றவுடன்
சீறிப் பாய்ந்து
கரையோரமாய்
தம்பியவர் தப்பிவிட
எட்டிப் பார்த்த
என் தலைக்கு
சுடு கலன் தயார் நிலையில்
சற்றேனும் திரும்பாமல்
விறைந்து நிற்க
உம்ப.... கொட்டி.... நே.....த
என்ற சட்டியின் குரல்


என்னை உறைய வைத்தது

அப்படியே
உற்று நோக்கியவனாய்
இரு கரம் தூக்கி
பாத ரட்சை எதுவுமின்றி
முன் நகருமுன்பே
என் உறவுகளை
ஒரு கணம்
கண் முன்னே
கொண்டு வந்தது

சுற்றித் திரிந்த என்னை
சப்பாணியாய்
இருத்திவிட்டு
ஊர் செல்ல உறவு செல்ல
தட்டி விட்டு
முன்னேற முயற்சி செய்யும்
மந்திரத்தை – என்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிவால் உணர்ந்து கொண்டேன்
அவர்களின் படி நிலை
பவ்... பத்து மீற்றர்
என்பதையும்
புரிந்து கொண்டேன்
இன்னும் ஏன் தாமதம்

எம் இன உறவுகளான
யாரோ பாட்டி பாட்டன்
கைக்குழந்தையுடன்
இளம்பெண்
நகர முடியாமல் மெல்ல
நகர்ந்து வருகையிலே
சுற்றம் முற்றும்
சுழன்று பார்த்து
மெல்ல எழுந்து
நானும் ஒருவனாய்
வாடி வதங்கி
வழி நடுவே
அடிமேல் அடி வைத்தேன்
எள்ளளவும் முடியவில்லை
மீண்டும் ஒருமுறை
பிறப்பெடுத்து முண்டி நடந்தோம்
முன் அரணைக் கடந்து....
உள்ளே முடங்கிக் கிடந்து....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெது மெதுவாய்
எனக்கு முன்னே வந்த
என் குடும்ப உறவைத்
தேடி விழிகளைத்
தூர எறிந்தவனாய்
அலைந்து திரிந்தேன்
கண்களுக்கு ஏமாற்றம்
மறுநாள்....
மறு வாயிலைக் கடந்து
நீண்டு பரந்த
வெளிகளுக்குள்ளே
அடைக்கபட்ட
மந்தைக்கூட்டம் போல் உராய்ந்து
திரிகையிலே கண்களில் குளிர்ச்சி
உறவுகளைக் கண்டுவிட்டேன்.

அங்ஙனமே
சற்று இடமெடுத்து
கால் ஆற அமர்ந்து
கடந்த நாள்கள்
பற்றி கற்பனையில்
நினைவு கொள்ள
கண்களில் வடிந்தோடிய
கண்ணீராய் கரைந்ததுவே
நினைவுகள் பல.......






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துள்ளித்திரிந்த
சுடுகலன் தோட்டாக்களும்
அள்ளி எறிந்த
விளை நிலத்து
விதை போல
கந்தகக் கலவையும்
எத்தனை எத்தனையோ
சொல்லில் அடங்கா
நவீனாங்கள் எல்லாம்
நம் மீது மெல்லக்
கொஞ்சியதைக் கண்டேன்.



அத்தனைக்கும்
பஞ்சமின்றி
வீட்டுக்கொருவர்
நாட்டுக்காய்ப்
போகவில்லை
மண்ணிற்குள்
விந்தையிலும் விந்தையாய்
வீண்பலி போனது
எம் இனமே...

இங்கே கரையோரம் எங்கும்
உடலில் உடையற்று
திடல் ஒன்றில் திரியும்
பசி வயிற்று
பாலகர்களையும்
கண்டேன்
ஒரு முனையின் ஓலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமுனையைத்
தொட்டன
இரங்குவார் யாருமின்றி
ஈனப் பலிகள்
அத்தனையும்
நடந்த பின்பும்
தப்பேதும் நடக்கவில்லை
தர்மத்தின் யுத்தமென
தப்பட்டம் அடித்துக்
கொண்டு....
ஊரை ஏமாற்றி
உலகை ஏமாற்றி
சம+தானம்
பேசும் நய வஞ்சகக்
கூட்டம் இங்கே
மலிந்து கிடக்கிறது



நாதியற்ற உலகமே
எம் உயிர் மட்டும்
தலைமுடியா
ஓராயிரம்
யுத்தங்கள் நடக்கின்றன
அத்தனைகும் கண்டனங்கள்
சட்ட நடவடிக்கைகள் பல
இச்சிறு தீவிற்கு மட்டும் விதிவிலக்கா....

ஒன்றுமட்டும் உண்மை
மற்றவரை மண்டியிடவைக்கும்
மனிதத்தின் பார்வைகளோடும்
மானத்திற்காய் உழைத்த வேர்களோடும்
சத்தியம் செய்து கூறுவது
தர்மத்தின் தேவதை
ஒரு நாள் கண் திறப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீம்பு

தத்தளிக்கும் உலகில்
தத்தெடுக்கவில்லை – எனை
தட்டிக்கழிப்பதற்கு

எட்டி அணைத்ததனால்
வந்தவளும் நானல்ல ....

பெட்டி பணமின்றி
கட்டி அணைத்தவளும் ....
ஓலைக் குடிசையும்
ஒட்டிய உடையுடன்
ஒப்பாரியோடு வந்தவளும் நானல்ல ....

ஒற்றைக் குமரியாய்
சொத்தைப் பிரித்தெடுத்து
சொந்த பந்தம் புடைசூழ
சொர்க்கத்தில் நிச்சயித்து
கட்டி அணைத்தவளே ......

உன் வெட்டி வீறாப்பை
கொட்டு குப்பையிலே
இது கருங்கல்லின் மேல்
செதுக்காணி கொண்டு
செதுக்கிய உதிரம்

ஆண் பெண் சமத்துவம்
புரியவில்லை உனக்கு
இதற்கு மேல் வாய் திறந்தால்
உச்சி பிளக்கும்
துண்டு இரண்டாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும்



யுத்தங்களின்
சத்தங்களைப்
கேட்ட நாம்
இன்று
சொர்ப்பன சுந்தரி
நீ தானே என
சாராயக் குவளைக்குள்
அகலிகை ஆகிவிட்ட
வித்தகனின்
சந்தங்களின்
யுத்தங்களைப் பார்க்கின்றோம்
நம் தெருக்களில்
சந்து பொந்துகள்
எங்கும் கள்ளச்
சாராயம்
கண்டு பிடித்து
கைது செய்ய வந்தால்
வந்தவனுக்கும்
கடிவாளம் ...........

தன்னைக் கெடுத்து
தன் குலத்தைக் கெடுத்து
தன் அயலானைக் கெடுத்து
தன் ஊரையே கெடுக்கும்
மாய வித்தகர்களே .....
இது ஒரு பிழைப்போ
மனிதா உனக்கு.....
தன் மானமுள்ள
எவனுக்கும் சத்தியம்
செய்து கொடு
உத்தமனாய்
வாழப் புறப்பட்டேன் என்று.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரம்

பட்டாடை போர்த்த
உடம்பும்......
நித்தம் ஒருவேளை
நிர்வாணமாய் இருப்பது
நிஜமே ..............

பிறக்கும் போது
கையில் நீயும்
கொண்டு வந்ததென்ன - உன்
கூட வந்த தென்ன



இறக்கும் போதும்
கையில் நீயும்
கொண்டு போவதென்ன - உன்
கூட வருவதென்ன

இடையில் ஏனோ
சேர்த்து வைக்க
ஆசை வந்த தென்ன
மானிடனே ..........

மனித வாழ்வு மாயை
மறையும் நிழலைப் போன்றது - அது
பூத்துக் குலுங்கும் பூக்களைப் போல்
காற்றில் உதிர்ந்து விடும் - உன்
வாழ்வும் பூவைப் போன்றது ....

மரங்கள் கூட காய்ந்த பின்பு
துளிர்த்து தளைத்து விடும்
மனித உயிர் மாய்ந்த பின்பு
திரும்ப வருவதில்லை

ஆக .. மொத்தத்தில்
பரலோகத்தில் நீ
சேர்த்த சொத்துத்தான்
நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்

கலையே ............
என் உயிர் மூச்சே
என் கண்களில் தெரியும்
தூர தரிசனமே .......
என் ஆற்றலுக்கு
வலுச் சேர்ப்பனவே
தாய் மடி மீது தவழ்கின்ற போது
கலைத் தேவதை எனைத்
தெரிந்து கொண்டாள்....
உன் பின்னே உயரிய சமூகத்தை
கட்டியெழுப்பு
தட்டிக் கொடுக்க
சமூகம் இருக்கிறது என்றாள்
ஏற்றுக் கொண்டேன்
என் தெரிவை
ஓவியம் தான் எந்தன் பெயர்
நடிப்புத்தான் எந்தன் முகவரி
சிற்பம்தான் எந்தன் இருப்பிடம்
நிஜமும் கற்பனையும் எந்தன்
எதிர்நோக்கு
ஒட்டு மொத்தத்தில்
கலையே எந்தன் சொத்து
என் சொத்தை
கிள்ளிக் கொடுக்கவில்லை
அள்ளிக் கொடுக்கிறேன்
அதில் பருகியவர் பலர்
எம் கண் முன்னே
நிஜங்களின் நிழல்களாக
நித்தம் வலம் வருகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிப்பாடு



ஒருவருக்கு
பிடித்த அன்பு
அரவணைப்பு அனைத்தும்
இன்னொருவரிடம்
நிரம்ப இருக்கலாம்
அதை
அன்பாக வெளிப்படுத்துவதும்
அரவணைப்பாக
வெளிப்படுத்துவதும்
திமிராக வெளிப்படுத்துவதும்
அவரவர் கைகளிலே
தங்கியுள்ளது.

# இல்லாள்



இல் ....... ஆள்
இல்லாத இருப்பிடமும்
இருப்பிடமோ .......
இல்லாள்
தம் நற்குணங்கலாலும்
ஒழுக்கம் சார்
செயற்பாடுகளாலும்
தன் இல்லத்திற்குப்
புகழையும் பெருமையையும்
சேர்ப்பவள்
இங்கு .....
தகுதி வாய்ந்த
இல்லத் தலைவியைக்
கொண்ட
இல்லமே நல்
இல்லமாக
அமையும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி

கோடை காலத்து
வேப்பம் மரம்
மாரி காலத்தை
பார்த்துச் சிரிக்கும்
எனக்கும் உயிர்
கொடு என்று

மாரி காலத்து
முருங்கை மரம்
கோடை காலத்தை
பார்த்துச் சிரிக்கும்
எனக்கும் உயிர்
கொடு என்று

காலங்களும் காட்சிகளும்
மாறி மாறி வருகிறது ......

வட புலத்து நிழல் கொடுக்கும்
ஆலமரமும் தன்
விழுதுகளை நம்பி
சிரித்து மகிழும்
ஆனால் .....
அந்த மரத்தைத்
தாங்கும் விழுதுகளை
ஒவ்வொன்றாய்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோ வந்தவன்
அறுத்தெறிந்து விட்டு
பலனைக் கொடு என்கிறான்

விழுது அறுத்த
கிளைகளின் இலைகளை
ஒவ்வொன்றாக பிடுங்கிவிட
விளைகிறான்.
இலைகள் கிளைகளின் மீது
புதிது புதியாய் முனைக்கின்றன

இத்துப் போன
எலும்புக் கூடுகள்
எழுந்து நின்று
கிளைகளுக்கு முண்டு கொடுக்க
மீண்டும் மீண்டும்
சிரிந்தபடி நிற்கிறது
வடபுலத்து ஆலமரம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டிக்கொடுப்பு



வாழ்வாங்கு வாழ்ந்தவனின்
வாழிடத்தை தொலைத்துவிட்டு
நாடற்ற ஏதிலியாய்
நான்கு பேர் நையப்புடைத்து விட

நல்லவை நடந்தாலும்
நடுத்தெருவில் நிற்பதுதான்
தமிழா எம் தலை விதியா

ஒன்று மட்டும் புரிகிறது
எம்மைக் காப்பாற்ற
கடவுள்தான் வரவேண்டும்
அதற்கும் விசித்திரம்
ஒன்றுமில்லை
எமக்கு நாற்திசையும்
நாதியற்ற நயவஞ்சகமே
மலிந்து கிடக்கிறது
போட்டி உணர்வை
விட்டு விடு
ஒன்றுபட எம்மால்
முடியாத போது இது
வெறும் கலியுகக்
கதையாகவே இருக்கும்
ஆனால்
தானும் உண்ணாத – தன்
இனத்தையும் உண்ண விடாத
விலங்கினத்தை அறிந்தோமே
அது உண்மைதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம் அதிகாலை எழுந்து
உன் விம்பத்தைப் பார்
இன்று நான் என் .....
செய்வேன் என்று .....

புரியாவிட்டால்
அதை உன்னிடமே கேள்
ஒரு முறை அல்ல இருமுறையல்ல
பலமுறை கேள்
விடை தெரிந்துவிடும்




நடுராத்திரிக் கனவுகள்
உன் நிலை குலைத்திருக்கும்
அது பொய்யாகலாம்
மெய்யாகக் கூடாது
இது ஒரு சோகக் கனவு
எழுந்து பார்த்தால்

ஒன்றும் தெரியாது
அது ஏன் இப்படி
நிகழ்ந்தது ஒரே குழப்பம்
சிந்திக்க எதுவும் தோன்றாமல்

எழுது கோலை கையில் எடுத்து
காகிதத்தில் எதை எழுதுவது
என்று யோசியாதே
இத்தனைக்கும்
உன் விம்பம்தான் காரணம்
உடனே சென்று முகத்தைப் பார்
உன்னுடன் பேசி
முடிவைப் பெற்றுக் கொள்
அன்றைய நாள் உனக்குப்
பதில் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா

ஊர் உலகம்
அறியாமல் உக்கிய
கோக்காலியின் கீழ்
ஒழிந்து கிடந்து ....

வந்தவனை வரவழைத்து
இருந்தவனோ தெருத்தெருவாய்
குந்தி எழுந்து சந்தி முடக்குகளில்
படுத்துறங்கி பரதேசம்
சென்ற பின்னே .....



அந்தியில் ....
நந்திக் கடற்கரையில்
நான் மட்டும் வாடுவதேன்
எந்தையும் தாயும்
எந்து குலாவிய சொந்தமும்
பந்தமும் எங்கே .....

அந்த நட்ட நடு ராத்திரியில்
இந்த வீட்டு நண்பருடன்
கடற்கரை மணலில்
வெந்து கருகினேனே ...
அர்த்த சாமத்தில்
ஆறுதல் சொல்ல
எத்தனையோ ஆயிரமாயிரம்
நண்பர்கள் இப்போ
என்னருகே .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உறவுகள் மட்டும்
வரவில்லை என்னைத்
தரிசிப்பதற்கு ..........
அது ஏன் ....
காப் பெற்றும்
மின் கம்பங்களும்
தொலைபேசியும்
காட்சியும்
நம் கண்முன்னே காணவில்லையே – இந்த

மாயா யால வித்தைகளும்
மணி முடிக் கோபுரமும்
கண்டு நீ ....
கழி கூருவதேனோ
என்னையும் ஒரு முறை
திரும்பிப் பாருங்கள்
முட்புதர் நடுவே
முடங்கிக் கிடக்கிறேன்

அன்று ஒரு வேளை
உணவின்றி தங்கள்
பசிக்காய் ஓடித்திரிகையிலே
இந்த நிலை வருமென்று
எண்ணியது யார்
எல்லாம் கண் விழித்து
மூடு முன்னே நிரந்தர
மூடு மந்திரம் கிடைந்ததுதான்
இக் கதியோ.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை அறி ..........

உனக்குள்ளே ஒரு திறமை
மறைந்து கிடக்கிறது
உனக்குள்ளே ஒரு தன்னம்பிக்கை
மறைந்து கிடக்கிறது
உனக்குள்ளே ஒரு புதிய யுக்தி
மறைந்து கிடக்கிறது....

எதற்கு நீ அஞ்சி ஓடுகிறாய்
அடுத்தவர் கைகளை நம்பியபடி
அவர்களை நம்பித்தான்
இப்பூமியில் பிறந்தோமா ......?

காகத்தின் கூட்டில்
முட்டையிடும் குயிலின்
சோம்பல் உனக்கெதற்கு
திரட்டிய யுத்தியின்
திறமையை திரட்டிக்காட்டு
அது ஏணியாக உன்னை
உயர்த்தும் .......
உனக்குள் உள்ள
அபாரமான சக்தியினை
உணர்ந்திடு உயரும் உன் வெற்றி .....

உன் பரம்பரையோடு
கூட வருவது ஒரு பங்கு
வளர்ப்பில் சேருவது இன்னொரு பங்கு
முயற்சியில் கிடைப்பது மறுபங்கு
ஒட்டு மொத்தத்தில் திரண்டால்
உன்பங்கு அடப்பன் கொடியாகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலையும் இளமை

இளையோனே.....
தொல்லைதரும் தேடல்கள்
தொங்கித் திரியும் கூட்டங்கள்
வீம்பான நெருடல்கள்

ஊருக்குள் குட்டிக் கரணம்
வேண்டாத காட்சிகளில் சரணாகதி
தேவையற்ற வலைத் தொடர்புகள்
அத்தனைக்கும் முட்டு வை ..... அன்றேல்
பூட்டுக்கள் இறுகிடும் மீட்சியேயின்றி

பாவைகளின் சேர்க்கையோ பலவிதம்
பலமிழந்து பணமிழந்து பண்பிழந்து
நரம்புத் துண்டங்களின் தளர்வினால் சோர்வுற்று
நாதியற்றுக் கிடந்திடுவாய் நடைபாதையில்

அந்தோ இளைஞனே கேள் .....
வேண்டாத ஆசையெல்லாம் புதையுண்டச் செய்வீர்
குழுவாகிப் போட்ட சேட்டையெல்லாம் விட்டொழி
பொங்கும் உம் இளமையைப் புனரமைப்பீர் .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையடி

காக்கு முக்கு வீட்டுப்பக்கம்
கால் நடையாய் ....
ஒற்றையடிப் பாதையிலே
ஒருவரோடு சென்றிருந்தேன்

இருவர் அங்கே
இருசில்லு வண்டியைப்
பிடித்தபடி இறுக்கமாய்
இனிமையாய் கலாய்த்துக் கொண்டிருந்தனர்



ஓரத்தில் விழி பிதுங்கிய
தெரு நாயும்
சிதைந்து கிடக்கிறது
தலைகுனிந்து .....
மூக்கைப்பிடித்தபடி
முன் நகர்ந்தேன்

என்ன ஆச்சர்யம்
நிற்க முடியாத தெருவோரம்
நின்மதியாய் யோடியொன்று ........ ம்
ஒன்றும் புரியவில்லை ...... ஓ .....அதுவா
தேவையற்ற எவரும் அங்கு
நிற்க முடியாது என்றுணர்ந்த
சாத்தான்கள் நிம்மதியாய்
நிற்கிறது .... பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நடந்து
காக்கு முக்குவுடன்
மண் வெட்டியோடு
மறுபடியும் திரும்பி வர
அங்கு சில ஆடைகள்
மட்டும் எஞ்சிக் கிடந்தன

இருவருமாய்
விழி பிதுங்கிய தெரு
நாயைக் கட்டி இழுத்து
வெட்டிப் புதைத்து
நிமிர்ந்து நடந்தோம்
ஒற்றையடிப் பாதையிலே ....

# புரிந்துகொள்

உனக்குள்
இருக்கும் உன்னையே
உன்னால்
புரிந்து கொள்ள
முடியாத போது
எனக்குள்
இருக்கும் என்னை
எப்படி
தெரிந்து கொள்வாய்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிள்ளித் தெளிப்பதேன்

திருத்து வீடுகளும்
பொருத்து வீடுகளும்
பொருந்தா உள்ளம்
கொண்ட ........
மக்களுக்கு
பொருத்தி விட
எண்ணுவதேன் மனிதா
பத்து லட்சத்தில்
இடியா வீடு கட்டிய
எமக்கு
இருபது லட்சத்தில்
காற்றில் பறக்கும்
வீடுகளும் சலுகையுமா ....
புரியாத புதிராய்
இருக்கிறது!.....
கொட்டம் இழந்தவனுக்கு
இனி மண்டியிட ஒன்றுமில்லை
என்றுணர்ந்து
இது போதும்
என்று நினைத்தாயா




அதில் பாதி
இதில் பாதி
அத்தனையும்
அவன் கொடுக்க
இதில் பாதி நீ எடுக்க
வழிந்து வந்த
நீராய்....
மிச்சம் சொச்சம்
கட்டி அடித்து
முழுவாழ்வும் மாற்றினோம் பார் என்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி பீடம்
ஏறிவிட்டால்
பணத்தைக் கண்டு
பிணமும் வாய் திறக்கும்
என்பர்
ஏன் ..........
ஐயா இந்த வேலை
மனிதன் என்றால்
சம அந்தஸ்து
எமக்குத் தேவை
இதில் வேறு பாகுபாடு
காட்டுவதேன்
உன்னிடத்தில்
ஓர் குண்டு
வெடித்தால்
சுற்றிவர நின்றவனுக்கும்
பிணத்துக்கும் பணம்
கொடுப்பீர்
இங்கு பல்லாயிரம்
குண்டுகளால் சந்ததியை
தொலைத்து விட்டு
எஞ்சியவன்
பெறுவதற்கும்
நாதியில்லை
இது தானாம்
சமாதானம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் உப்பும்

தெய்வப் படைப்புக்களில்
முதன்மை பெறுவது
மனிதப்படைப்பு
இந்த .........
மனிதப் படைப்பை
உப்பிற்கு
ஒப்பிட்டுப் பார்க்கலாம்
சிறு உப்பு
பெரும் உணவுக்கு
சுவையைக் கொடுக்கிறதே ..........
அதுபோலவே ...
ஒரு மனிதன் பல மனிதர்களுக்கு
உப்பாக இருக்க வேண்டும்
உப்பானது எப்போது –தன்
தூய்மையை இழக்கின்றதோ
அப்போதே அது
மண்ணுக்கு சொந்தமாகிறது
அந்த மண்ணும் – பின்
எதற்கும் பயன்படாது



உப்பை எப்படி
உருவாக்குகின்றோம்
அதே போல் ஒரு நல்ல
மனிதனும் உருவாக வேண்டும்
உப்புக்குத் தனித்தனியாக
பாத்திகள் அமைத்து
கடல் நீரை
கொண்டு வந்து
சூரிய ஒளியின் உதவியுடன்
இரு முனைத் தாக்கத்தால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடியம் குளோரைட்
நேர் எதிர் மூலகங்களின் பிணைப்பால்
உருவாகிறது

அப்படியே மனிதனும்
அறிவு எனும் சூரிய ஒளி பெற்று
மனிதப் பண்பு எனும்
பிணைப்பால் கட்டுப்பட்டு
தூய உப்பாக மாறி
பிற மக்களுக்கு
துணையாக இருக்க
வேண்டும் அல்லவா ...
உப்பானது உவர்ப்பற்றுப்
போனால் ....
கிடைக்கும் பலன்தான்
யாதோ .......?
எல்லாமே அவரவர் கைகளில்?

# நினைவு

யாரும் உன்னை
வெறுக்காத
அளவிற்கு
வாழ்க்கை அமைந்திருந்தால்
யாரும் உன்னை
மறக்காத
அளவிற்கு
மரணம் அமைந்திருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா, அம்மா

வாழ்க்கையில் ..............
எத்தனை எத்தனையோ
கஸ்டங்கள், நஸ்டங்கள்
துன்பங்கள் துயரங்கள், அவமானங்களை
எல்லாம் தாண்டியும்
ஒன்றுமே தெரியாதது போல்
காட்டிக் கொண்டு
குடும்பத்திலும் சமூகத்தின் மத்தியிலும்
சிரித்துக் கொண்டு இருக்கும்
என் அன்புத் தெய்வங்களுக்கு
நிகரான நம்பிகை ஊட்டும்
பொக்சிசம் இந்த
உலகில் வேறேதும்
உண்டோ ..........


# நியதி

விதை விதைப்பவன்
விளைச்சலை
அறுவடை செய்கிறான்
அது போலவே
நீங்கள்
எதை மற்றவர்களுக்கு
செய்கிறீர்களோ
அதுவே
திரும்ப வரும்
இதுவே நியதி ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலையும் நின்மதி



உங்களின்
பொழுது போக்கிற்காகவோ...
தேவைகளுக்காகவோ
அடுத்தவரின்
உண்மையான
அன்பிலும் உணர்விலும்
விளையாடாதீர்கள் .........
இதை ....
நீங்கள் உணரும்
காலம்
வரும் போது
உங்கள் நின்மதி
தொலைந்து விடும்.

# புகழ்

ஒவ்வொரு
மனிதனுக்கும்
திறமை என்பது
கடவுளால் கொடுக்கப்பட்டது
எனவே
அடக்கத்துடன்
இருங்கள்
புகழ்...
என்பது
மனிதனால் கொடுக்கப்பட்டது
நன்றியுடன் இருங்கள்
அகம்பாவம் என்பது
நமக்கு நாமே கொடுத்துக்கொண்டது
எச்சரிக்கையுடன் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் எங்கே...?

உரம் அற்ற உலகமே
இனி தட்டித் தாவரம்
அமைத்தது போதும்
பரிதாவப் பாவைகள்
என்றெம்மை
படுகுளியில்
வீழ்த்த நினைப்பதேன்
உலகமே - உன்
சுயநலப்பார்வை .... போதும்

சுயநலப் பார்வை
எமை அழிப்பதா
மனித நேயம்
மரணித்த மண்ணில்
மனிதத்திற்காய் ஏங்கும்
பல உள்ளங்கள்
இருக்கின்றனவே
அது....
வானைப் பிழந்து
ஓலமிடுகிறது
ஐயோ..... அம்மா....
இது வெறும்
கற்பனைக் கலியுகம் அல்ல
கண்முன்னே நடந்தேறும்
காலத்தின் நிஜங்கள்
காப்பாற்ற யார் வருவார்
அன்றோ....
நீ என்னை
தெண்டனிட்டு
வணங்கினால் உலகை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடமே
ஒப்படைப்பேன் என்றது – சாத்தான்

அதுவே நிஜமாகின
இன்று..........
சுய நலன்களும்
சுக போகங்களும்
அநீதியின் முன்
மலிந்து கிடக்கிறது
நீதி கூற யாருமின்றி
சாத்தான்களின் பிடியில்
சிக்கித் தவிக்கிறது
எம்......
உயிர்மீது
உயில் எழுதும் உலகமே
பெயர் சொல்லும்
உத்தமர்கள்
ஒரு சிலர்கள் வாழ்ந்தாலும்
ஓராயிரம் நயவஞ்சகர்கள்
நர்த்தனங்கள் ஆடுகின்றனர்
சாத்தான்களே .... உம்
ஒட்டியாரக் கனவுகளை
வெட்டியாய் திரியும்
உன் மீதே காட்டு
பீனிக்ஸ் பறவைகள்
நாங்கள்
மனித நேயம்
மரணிக்கவில்லை என்று
மார்தட்டி
நிமிர்ந்து நில்
துணிந்து சொல்
மனிதம் மலர்ந்திடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தந்தையின் அரவணைப்பை இழந்த குழந்தையின் குமுறல்

எந்தையே .... எம்
உயிர்மூச்சே
மலர்மீது தேன்குடிக்கும்
வண்ணத்திப் பூச்சிகளாய்
வலம் வரும் வேளையில்
வாயை அடைத்துவிட்டு
தேனை உறிஞ்சச் சொல்லும்
மனிதக் கூட்டம் இங்கே
விளைந்து கிடக்கிறது....
அப்பா என ... துள்ளிக்குதித்து
பெற்றெடுத்த தந்தையுடன்
அன்பு காட்டி....
அறிவு பெற்று....
அனுபவம் பெற முடியவில்லையே....
ஊர் வாசனை அறிந்து
உலக வாசனை அறிய முடியவில்லையே....
இன்னும் எத்தனையோ நவீனங்கள்
இப் பூமியில்...
அத்தனையும் காலத்தின்
பிடியில் சிக்கித்
தவிக்கிறதே...
அப்பா....
எமைப் பெற்றெடுக்க
மட்டுமா நீயிருந்தாய் – எம்மை
இன்று தனிமையில் தவிக்கவிட்டு
தனிமரமாய் தவிப்பதேன்
எல்லாம்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எள்ளி .. நகையாடும்
வம்பர்களின் வீம்புகளால்
வந்த விதியோ இது
தனிமை எமை வாட்டுகிறது
சிறகொடிந்த பறவையாய்
பறந்து திரி ய முடியவில்லை
தவிக்கிறது பிஞ்சு மனது
அப்பா...
பிஞ்சு வயதில்
ஒட்டிப்படுத்த ஞாபகங்கள்
அத்தனையும்
நினைவில் நிழலாடிக்கொண்டே
காற்றில் உரசிக் செல்கிறது
எத்தனை எத்தனையாயிரம்
மழலைகள் – தம்
எந்தையை இழந்து
தவிக்கிறார்களே– இப்
பருவத்தில்
ஏன் இறைவன் – எம்
தலைவிதியை இப்படி எழுதிவிட்டார்
அப்பா....
அத்தனைக்கும் எம்மேல்
யார் தயவு காட்டுவார்
படைத்தவனை
கேட்டேன்
நான் இல்லை என்றார்
எம தர்மனை
கேட்டேன்
நானும் இல்லை என்றார்
நடுவே உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடனைக் கேட்டேன்
மௌனித்தது
என்... குரல்...

மாறாதோ...துயரம்....
மலராதோ மனித மனங்களும்
அவர் குணங்களும்
அப்பா
எத்தனை
வித்துடல் வித்தென
வீழ்ந்தாலும்
சத்திய சோதனை
பத்தென வந்தாலும்
நித்தமும் காத்திடும்
எந்தையும் நீயன்றோ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாழ்க்கை



வாழ்க்கை என்பது
புல்லாங்குழல் போல்
ஓட்டைகள் நிறைந்ததுதான்
ஓட்டைகள் மறைக்கப்படும் போதுதானே
ராகங்கள் பிறக்கின்றன.

# ஆயத்தம்

நீ எந்த அளவுக்கு
உயர்ந்து செல்ல
வேண்டுமென
நினைக்கிறாயோ....
அந்த அளவுக்கு
கடுமையான சோதனைகளை
கடந்து செல்ல
உன்னைத் தயார் செய்து கொள்
அங்கே.......
நீ ஏறிச் செல்ல
பாதைகள் நடுவே
கரடு முரடும்
முட் செடிகளும்
நிறைந்து கிடக்கின்றன
அதனை அவதானத்துடன்
கடந்து செல்....
ஒரு வேளை
நீ.........
விரைவாக கீழே
வரவேண்டி ஏற்பட்டால்
அவ்வழியே மாட்டிக் கொண்டு
மரிக்க வேண்டி வரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாசீனம்

தெருவில்
கிடக்கும் காகிதமாக
யாரையும்
வெறுக்காதே
நாளை...
அது பட்டமாக
பறந்தால்
நீயும் நானும் கூட
சற்று நிமிர்ந்து
பார்ப்போம்.

## உண்மை

நீங்கள்
உண்மைக்காகவும்
அன்புக்காகவும்
எதையும்
இழக்கலாம்
ஆனால் .........
உண்மையையும் அன்பையும்
எதற்காகவும்
இழந்து விடாதீர்கள் ..........

## வலி

ஆயிரம்....
வலிகளை
சுமந்து கொண்டு
வெளியில் சிரிக்கும்
இதயங்கள் தான்
அதிகம்....
இவ்வுலகில்
என்னைப்போல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு




ஒரு மனிதன்
அவனது
மதத்தை வைத்தோ
யாதியை வைத்தோ...
மதிக்கப்படுவதில்லை
மாறாக
அவன்
செய்யும்
நற்செயல்களால்
மட்டுமே
மதிக்கப்படுகிறான்.

# கவனம்

நீ...........
நடந்ததை
நினைத்தும்
கவலைப்படாதே
நடக்கப் போவதை
நினைத்தும்
கவலைப்படாதே
இப்போதுள்ள
சூழ்நிலையில்
கவனமாய் இரு.

# பண்பு

பணிவு என்பது
தாழ்மையின்
சின்னமல்ல
உயர்ந்த பண்பின்
அறிகுறி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வு

ஒருவர்
செய்கின்ற
தீமைகள்
என்றோ ஒரு நாள்
இரு ........
மடங்காக
நம்மிடம்
வந்து சேரும்
என்கின்ற பயம்
எவனுக்கு எழுகின்றதோ
அப்போது தான்
அவனது தவறுகள்
குறைந்து விடும்
நன்மையான
செயல்களும் அதிகரிக்கும்

# எதிர்கொள்

மோது ...
போராடு...
விழு...
அழு...
நில்...
தோல்விகள் வரும்
வஞ்சனைகள் வரும்
சூழ்ச்சிகள் வரும்
துரோகிகள் வருவர்
இவைதான்
உன் வெற்றியின்
சவால்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலி

கோயிலுக்குப் போனாலும் சரி
போகவிட்டாலும் சரி
தெய்வத்தை வணங்கினாலும் சரி
வணங்காவிட்டாலும் சரி
தெய்வம்
நமக்கு அருள்புரிய
தடையேதும் இல்லை
பிறரை....
ஏமாற்றுவதை
நிறுத்தினாலே போதும்
தெய்வ
அருளுக்கு
பாத்திரமாகி விடுவோம்.

---

## கொடுத்து வாழ்



பிறரை...
கெடுத்து
வாழ்வதை விட
பலருக்கு
கொடுத்து வாழ்வது
நல்ல வாழ்க்கையாகும்
கொடுப்பதற்குரியது
பணம் மட்டுமல்ல
உன்
வார்த்தையும் ஒருவருக்கு
தாகம் தணிக்கலாம்
உன்
புன்னகையும் ஒருவன்
உள்ளத்தில் விளக்கேற்றலாம்
உன்
அன்பு ஒருவனை
மனிதனாக வாழவைக்கலாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சாதே


சொல்ல முடியாத
சோகங்களும்
வெல்ல முடியாத
வாதங்களும்
பேச முடியாத
வார்த்தைகளும்
இடிக்க விரும்பாதவற்றை
இடிப்பதும்
இவை எல்லாம்
கொண்டது தான்
மனித வாழ்வு.

## மனிதம்

மனிதன் மனிதனாக
வாழ்வது முக்கியமல்ல
மனிதத்தோடு
வாழ்கிறானா
என்பதுவே
முக்கியமானது.

## தைரியம்

இந்த
உலகில்
சந்தர்ப்பம் என்பது
நம் ......
கண்முன்னே
கோடிக் கணக்கில்
கொட்டிக் கிடக்கின்றன
ஆனால் .....
தைரிய சாலிகளுக்கு
மட்டுமே
கண்ணுக்குப் புலப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளியே வா

உங்கள்
ஆற்றல்களை
அடக்கி வைத்திருப்போரே ....
சின்ன
நெருப்பாய்
திறமை இருந்தால்
காற்று
அதனை அணைக்கும்
காட்டு நெருப்பாய்
திறமை இருந்தால்
காற்று
அதனை வளர்க்கும்
சின்ன நெருப்பா......?
காட்டு நெருப்பா .....?

## வெற்றி

ஒரு செயலை செய்த பின் சிந்திப்பதை விட செய்ய முன் சிந்திப்பவனே வெற்றி பெறுகின்றான்.

## நம் செயல்

உண்மையில்
இறைவன்
கை கொடுப்பதும்
இல்லை
கைவிடுவதும் இல்லை
நாம் செய்யும்
புண்ணியங்களே
நமக்குக்
கை கொடுக்கின்றன
நாம் செய்த
பாவங்களே
வினையாகின்றன.

## தோல்வி

தோல்வியை
ஆணியாக நினைத்தால்
உறுத்தும்
ஏணியாக நினைத்தால்
உயர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உயர்வு

பிறப்பால்
யாரும் சமமே
தர்மமான செயல்களை
செய்வதாலும்
நற்குணங்களை
வளர்த்துக் கொள்வதாலும்
ஒருவன்
மேன்மையான
நிலைக்கு
உயர்த்தப்படுகின்றான்



## நேர்

என்தவறுகளை
என்
முகத்தைப் பார்த்து
என்னிடமே
கூறுங்கள்
என்னைச் சுற்றி
உள்ளவர்களிடம் அல்ல
ஏனென்றால்
என்
தவறுகளை
நான் தான்
திருத்திக் கொள்ள
முடியும்
மற்றவர்கள்
அல்ல ....



## தெளிவு

உன்னோடு
அன்பாகவும்
பண்பாகவும்
பாசமாகவும் ....இருந்து
நன்றாகப் பழகும்
அனைவரும்
நண்பர்கள் இல்லை
என்ற சிறு தெளிவு
இருந்தால் போதும்
சில.....
துரோகங்களையும்
பல
ஏமாற்றங்களையும்
தவிர்க்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை

உனக்கு
ஏற்படும்
ஆசைகளில் இருந்து
மனதை
கட்டுப்படுத்தினாலே
போதும்
எத்தனையோ
பிரச்சனைகளுக்கு
விடை கொடுத்து
விடலாம்



## உன்னால் முடியும்



இந்த இரக்கமற்ற
உலகில்
ஒரே
ஒரு நபரை
உன்னால்
நல்லவனாக
மாற்ற முடியும்
அந்த நபர்
நீ ... தான்

## பணிவு



நீங்கள்
எந்த இடத்திற்குச்
சென்றாலும்
அங்கு உங்களுக்கு
மதிப்பு இல்லை என்று
நீங்கள் உணரும்
இடங்களில் ....
மௌனமாக இருக்கப்
பழகுங்கள்
காலப்போக்கில்
உங்களுக்கான
மதிப்பை அங்கே
ஈட்டித்தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம்

இன்பத்திலும் துன்பத்திலும்
சிரிக்க பழகிக் கொள்
எப்போதுமே – உன்
வாழ்வு சொர்க்கம் தான்.

## இழப்பு

இழப்புக்களை இதயத்தில் சுமக்காதே
உயர்வை தலையில் சுமக்காதே
இரண்டுக்கும் சுமை அதிகமானால்
இறுதியில் உன்னையே இழக்க வேண்டிவரும்.

## காத்திருப்பு

எனக்கு மட்டும் ஏனிந்தச் சோதனை
என்று நீ உணரும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றின்
பின்னாலும் நிலையான சந்தோசம் மறைந்திருக்கும்
அது முன்னால் வரும் வரை காத்திரு நம்பிக்கையுடன்.

## மன்னிப்பு

மன்னிப்பைக் கேட்பதற்கும் கொடுப்பதற்கும்
கற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கையை இலகுவாக்குவீர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றுப்படுத்தல்

உங்கள் மீது அதிக நம்பிக்கை உடையவர்களை
நீங்கள் ஒருபோதும் சொல்லாலும் செயலாலும்
கடமையில் தவறுவதாலும் புண்படுத்திவிடாதீர்கள்
அதை ஆற்றுப்படுத்த நீண்ட நாட்கள் தேவைப்படும்.

## ஏமாற்றம்

நாம் யாரை அதிகமதிகம் நம்புகின்றோமோ
அவர்களாலே ஏமாற்றப்படும் போது
உண்மையான அன்பும் பாசமும் மௌனித்துப் போகிறது.

## துன்பம்

பிறர் துன்பத்தில் கலந்து கொள்பவனும்
பிறர் துன்பப்படக் கூடாது என நினைப்பவனும்
அதிகம் பிறரால் துன்பத்தை அனுபவிக்கிறான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வாழ் நாளில் கடந்து வந்தவைகள்

- பலவிதமான அவமானங்களைக் கொடுத்தவர்கள்
- பலவிதமான சோதனைகள் தந்தவர்கள்
- பலவிதமான துயரங்களைத் தந்தவர்கள்
- பலவிதமான துரோகங்கள் இளைத்தவர்கள்
- பலவிதமான கல்வி அறிவூட்டியவர்கள்
- பலவிதமானவர்கள் பகடைக்காயாக பயன்படுத்தியிருப்பார்கள்
- **இவர்களை நினைவிற்கொள்ளுங்கள்**
- இவர்கள் தான் நாம் ஒளிராய் மிளிர முக்கியமானவர்கள்

## ஊழல்

உண்மைக்காகவும் நேர்மைக்காகவும் எவன் ஒருவன் உழைக்க முற்படுகிறானோ அவன் எங்கு தன்னை அடையாளப்படுத்தினாலும் சிலர் ஊனப்பார்வையுடன் நோக்குவர். ஏனெனில் எங்கும் எதிலும் ஊழலே மலிந்து கிடக்கிறது.

---

## அடித்தளம்

மனிதனுக்கு கௌரவம் எனும்
கோபுரத்தைக் கட்யெழுப்புவதற்கு
நீண்ட அடித்தளம் தேவைப்படுகிறது
அதை அகௌரவப்படுத்துவதற்கு
ஒரு சில வினாடியே போதும்.

## சமாதானம்

சமாதானம் என்பது
தராசு போன்றது
இரு பக்கமும் சரி நிகராய்
பங்கிடுவதே சம+தானம்
என்பதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி....

புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நான் நீண்ட காலமாக அதிபராக பணியாற்றிய வேளை 1997இல் தொண்டர் அழுப்படையில் சித்திர,சமய ஆசிரியராக என்னுடன் இணைந்து கொண்டவர். அக்காலம் முதலே இவரது நாடக, ஓவிய கலைத்திறன் முயற்சிகள் என்னை பிரமிக்க வைத்தன. அன்று தொட்டு இன்றுவரை கலை உலகில் தனக்கென முத்திரை பதித்து வலம் வருபவர் திரு.ந. நிக்சன் அவர்கள்.

அதிகம் சிந்திப்பவன் சிந்தனையாளராக மாறுகின்றான் இன்று " மலர்ந்த சிந்தனை" எனும் நூலினை இலக்கிய உலகிற்கு சாதாரண மொழிநடையில் அமைத்து வாசகர்களின் உணர் திறனுக்கு சுவையூட்ட முனைந்திருப்பது மிக வரவேற்கக் கூடிய விடயமாகும். இவர் கலைத் தளத்தில் பல முனைகளில் தனது ஆளுமையை வெளிப்படுத்தி நிலை நிறுத்தி நிற்பவர் அத்தோடு ஆன்மீக செயற்பாடுகள், சமூக செயற்பாடுகள் எல்லாம் இவர் பெயர் பதித்து நிற்கின்றது. எமது கிராமத்தில் உள்ள WRDS தவிர்ந்த அத்தனை அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்தி மக்களுக்கான பொதுப்பணிக்களைச் செய்துவருபவர். அரச நிதியில் இவரால் கட்டப்பட்ட நெற்தளமும் தன் இலாபமற்ற அர்ப்பணிப்பை பறை சாற்றுகிறது.

இவ்வாறான மனிதர்களை சமூகம் எளிதில் மறந்து விடுவதில்லை " தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இன்னும் பல உயர்வுகளைக் காண வேண்டி ஆசியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

திரு.க.தேவேந்திரன்
( ஓய்வு பெற்ற அதிபர் )
சமாதான நீதவானும்
கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும்

கோரக்கன்கட்டு
பரந்தன்.

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org